1990 சனவரி 20]

ஈரோட்டுக்குள்ளே வரக்கூடிய முக்கிய விளை பொருட்களான மஞ்சள் போன்ற பொருட்களை பாரம் ஏற்றிக் கொண்டு லாரிகள் வருகின்ற பாதையாகவும் அந்தப் பாலம் அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட லாரிகள் அந்தப் பாலத்தில் நுழையவும் போகவும் முடியாத நிலை இருப்பதால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. அதேபோல, ஈரோட்டில் உள்ள மருத்துவமனைக்கும் வருகிற பாதையாக அது இருக்கிறது. கிராமப் புறங்களில் இருந்து வருகிற நோயாளிகளும், உயிருக்கு ஆபத்தான நிலையில் வருபவர்களும் அங்கே வரமுடியவில்லை. அதை மனதில் கொண்டு, உடனடியாக அந்தப் பாலத்தை விரிவு படுத்தவோ அல்லது மேம்பாலம் அமைக்கும் திட்டத்தை உருவாக்கவோ இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததுதான் அந்தப் பாலம் என்பதை அரசு உணர்ந்த காரணத்தால்தான், அந்தப் பாலத்தை அகலப்படுத்துவதற்காகவும், அதை மேம்பாலமாக மாற்றியமைக்கவும் இப்போது ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. சுமார் 120 லட்ச ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதோடு பொருளாதார ஆய்வு, போக்குவரத்து ஆய்வு போன்றவை நடத்தி, அதன் பிறகு ரயில்வே துறையிடமும் கலந்து பேசி, பின்னர் அந்தப் பணி எடுத்துக் கொள்ளவேண்டிய நடவடிக்கைகளில் அரசு துரிதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

திருச்சி இராசாசி காசநோய் மருத்துவமனை.

*3260. திரு. அன்பில் பொய்யாமொழி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி இராசாசி காசநோய் மருத்துவமனையை செங்கிப்பட்டி மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவமனையுடன் இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழுவதற்கில்லை.

[1990 சனவரி 20

திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ராஜாஜி மருத்துவ மனையைச் சோதனையிட்ட நேரத்தில், அது திருச்சியின் மையப் பகுதியில் உள்ளது என்பதை அறிவார்கள். அதைத் திருச்சிக்கு அருகில் உள்ள பாத்திமா நகருக்கு மாற்றும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கேட்கப் பட்டிருக்கிற மூலக் கேள்வி ராஜாஜி காசநோய் மருத்துவ மனை, செங்கிப்பட்டி மருத்துவ மனையோடு இணைக்கப்படு வதற்காக திட்டம் இருக்கிறதா என்பதுதான். செங்கிப்பட்டி யிலிருக்கும் மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவ மனை தனியாரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அதன் தலைவராக தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். செங்கிப்பட்டி மருத்துவ மனையை தஞ்சை மருத்துவக் கல்லூரியோடு இணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருகின்றன. மேலும் ராஜாஜி காசநோய் மருத்துவ மனையில் 103 படுக்கைகள் உள்ளன. அது நகரத்தின் மையப் பகுதியில் இருக்கிறது. பல நோயாளிகள், வீட்டிலிருந்தே சென்று மருத்துவம் செய்து கொள்கிறார்கள். அந்த மருத்துவ மனை அங்கே இருப்பதுதான் உசிதமாக இருக்கும் என்று கருதப்படு கிறது. உறுப்பினர் கூறியது போல, அப்படி மாற்றுவது குறித்த கருத்தை மக்கள் ஏற்றுக் கொண்டால், அதை அரசு பரிசிலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டந் தோறும் டி. பி. சானடோரியம் அமைக்கும் பரிசீலனை இருக்கிறதா? அப்படி சானடோரியம் இல்லாத இராமநாதபுரத்தில் காச நோயாளிகள் அதிகமாக இருக்கிறார்கள். குறிப்பாக பரமக்குடி பகுதியில் மட்டும் தினமும் 100 பேர் புற நோயாளிகளாக வந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவ்வாறு காச நோய் அதிகமாக இருக்கும் ஊர்களில், காச நோய் மருத்துவ மனை தனியாக அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இப்போது காச நோய்க்காக அரசு மருத்துவ மனைகளிலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் மருந்துகள் கொடுக்கப் படுகின்றன. அங்கே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே மாவட்டந்தோறும் தனியாக காச நோய் மருத்துவ மனைகள் ஏற்படுத்த அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது. கிராமப்புறங்களிலேயே இதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.